ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தூம்புடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தூம்புடை ॥

## திருநாங்கூர்த் திருமணிக்கூடம்

‡தூம்புடைப் பனைக் கை வேழம்⋆ துயர் கெடுத்தருளி⋆ மன்னு
காம்புடைக் குன்றம் ஏந்திக்⋆ கடு மழை காத்த எந்தை⋆
பூம் புனற் பொன்னி முற்றும் புகுந்து⋆ பொன் வரண்ட⋆ எங்கும்
தேம் பொழில் கமழும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானே (1)

கவ்வை வாள் எயிற்று வன் பேய்க்⋆ கதிர் முலை சுவைத்து⋆ இலங்கை
வவ்விய இடும்பை கூரக்⋆ கடுங்கணை துரந்த எந்தை⋆
கொவ்வை வாய் மகளிர் கொங்கைக்⋆ குங்குமம் கழுவிப் போந்த⋆
தெய்வ நீர் கமழும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானே (2)

மாத் தொழில் மடங்கச் செற்று⋆ மறுதிற நடந்து⋆ வன் தாள்
சேத்தொழில் சிதைத்து⋆ பின்னை செவ்வித் தோள் புணர்ந்த எந்தை⋆
நாத் தொழில் மறை வல்லார்கள்⋆ நயந்தறம் பயந்த⋆ வண்கைத்
தீத் தொழில் பயிலும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானே (3)

தாங்கரும் சினத்து வன் தாள்⋆ தடக் கை மா மருப்பு வாங்கி⋆
பூங்குருந்தொசித்துப் புள் வாய் பிளந்து⋆ எருதடர்த்த எந்தை⋆
மாங்கனி நுகர்ந்த மந்தி⋆ வந்து வண்டிரிய⋆ வாழைத்
தீங்கனி நுகரும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானே (4)

கரு மகள் இலங்கையாட்டி⋆ பிலங்கொள் வாய் திறந்து⋆ தன்மேல்
வரும் அவள் செவியும் மூக்கும்⋆ வாளினால் தடிந்த எந்தை⋆
பெரு மகள் பேதை மங்கை⋆ தன்னொடும் பிரிவிலாத⋆
திருமகள் மருவும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தனே (5)

கெண்டையும் குறளும் புள்ளும்⋆ கேழலும் அரியும் மாவும்⋆
அண்டமும் சுடரும்⋆ அல்லா ஆற்றலும் ஆய எந்தை⋆
ஒண் திறல் தென்னன் ஓட⋆ வடவரசோட்டம் கண்ட⋆
திண் திறலாளர் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தனே (6)

குன்றமும் வானும் மண்ணும்⋆ குளிர் புனல் திங்களோடு⋆
நின்ற வெம் சுடரும்⋆ அல்லா நிலைகளும் ஆய எந்தை⋆
மன்றமும் வயலும் காவும்⋆ மாடமும் மணங்கொண்டு⋆ எங்கும்
தென்றல் வந்துலவும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானே (7)

சங்கையும் துணிவும் பொய்யும்⋆ மெய்யும் இத் தரணி ஓம்பும்⋆
பொங்கிய முகிலும்⋆ அல்லாப் பொருள்களும் ஆய எந்தை⋆
பங்கய முகுத்த தேறல்⋆ பருகிய வாளை பாய⋆
செங்கயல் உகளும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானே (8)

பாவமும் அறமும் வீடும்⋆ இன்பமும் துன்பம் தானும்⋆
கோவமும் அருளும்⋆ அல்லாக் குணங்களும் ஆய எந்தை⋆
மூவரில் எங்கள் மூர்த்தி⋆ இவன் என முனிவரோடு⋆
தேவர் வந்திறைஞ்சும் நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தனே (9)

‡திங்கள் தோய் மாட நாங்கூர்த்⋆ திருமணிக்கூடத்தானை⋆
மங்கையர் தலைவன் வண் தார்க்⋆ கலியன் வாய் ஒலிகள் வல்லார்⋆
பொங்கு நீர் உலக மாண்டு⋆ பொன் உலகாண்டு⋆ பின்னும்
வெங்கதிர்ப் பரிதி வட்டத்தூடு போய்⋆ விளங்குவாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com